பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

13 10 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் புதிய தொழில்நுட்பம், சுயசார்புக்கு ஊக்கமளிக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் பொருளாதாரத்தை, 2035-ம் ஆண்டிற்குள் ஒன்று புள்ளி ஏழு ட்ரில்லியன் டாலராக அதிகரிக்க, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உதவும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டங்கள் மூலம் மூன்றரை கோடி மக்கள் பயனடைந்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. வில்வித்தை ப்ரீமியர் லீக் போட்டியில் ராஜ்புத்தானா ராயல்ஸ் அணி கோப்பையை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்திய வானிலை ஆய்வு மையத்தால் உருவாக்கப்பட்டுள்ள, புவியியல் தகவல் நடைமுறை அடிப்படையிலான புதிய தொழில்நுட்பம், சுயசார்புக்கு ஊக்கமளிக்கும் என்று, மத்திய அறிவியில் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள இந்திய வானிலை ஆய்வு மைய தலைமையகத்திற்குச் சென்ற அவர், முற்றிலும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த புதிய தொழில்நுட்பம் மூலம், சுமார் 250 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டிருப்பதற்கு, பாராட்டுத் தெரிவித்தார்.

இது தவிர, வருடாந்திர பராமரிப்பு செலவிலும் ஐந்தரை கோடி ரூபாய் அளவிற்கு சேமிப்பு கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வானிலை பற்றிய தகவல்களுக்காக, வெளிநாடுகளை சார்ந்திருக்கும் நிலை, இனி தவிர்க்கப்படும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதாரத்தை, 2035-ம் ஆண்டிற்குள் ஒன்று புள்ளி ஏழு ட்ரில்லியன் டாலராக அதிகரிக்க, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு இயக்கதிற்காக கடந்த 5 ஆண்டுகளில் 10 ஆயிரத்து 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்காக 38 ஆயிரம் மையங்கள் வாயிலாக புதுமைக் கண்டுபிடிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த தொழில்களில் சுமார் 60 லட்சம் பேர் வேலைவாய்ப்பு பெற்றிருப்பதுடன் இந்த தொழில்நுட்பம் வாயிலாக இந்த ஆண்டு 280 பில்லியன் டாலருக்கும் அதிகமாக வருவாய் கிடைக்கும் என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது உறுதி என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற தேர்தலையொட்டி மதுரையில், பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மேற்கொள்ளும் “தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்” என்ற தலைப்பிலான பிரச்சாரப் பயணத்தின் தொடக்க விழாவில் பேசிய அவர், மத்திய அரசு தமிழகத்திற்கு 11 லட்சம் கோடி ரூபாய் நிதி வழங்கி இருப்பதாக கூறினார்.

(Voice Byte - L. Murugan - 52 Sec)

இக்கூட்டத்தில் பேசிய பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், திமுக-விற்கு எதிரான அனைத்துக் கட்சிகளும் ஓரணியாக தேர்தலை சந்திக்க வேண்டும் என்றார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சி ஆட்சி நடைபெற்றால் தமிழகம் மேலும் வளர்ச்சியடையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் அஇஅதிமுக, தமாகா உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு செயல்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்கள் மூலம் சுமார் மூன்றரை கோடி மக்கள் பயனடைந்துள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்துப் பேசிய அவர், குடிநீர் திட்டங்களுக்காக 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக கூறினார்.

இதன்மூலம் மதுரை, ராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நகராட்சி நிர்வாகத்துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதன் காரணமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் புதிய பேருந்து நிலையங்கள், சாலைகள் மற்றும் எல்.இ.டி. மின் விளக்குகள் அதிக அளவில் அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு. கே.என். நேரு தெரிவித்தார்.

<<<<>>>>

ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்க கூடுதல் நிதி ஒதுக்கி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. மதிவேந்தன் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டியில் உள்ள அரசு ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைக் கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த பின்

செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<>>>>

வேளாண் விளைபொருள் உற்பத்தியை அதிகரித்து விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

விவசாயிகளின் நலனுக்காக செயல்பட்டு வரும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் வகையில், சேலம் சூரமங்கலத்தில் நபார்டு வங்கி சார்பில் கிராம அங்காடி தொடங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் கிராமப்புற பொருளாதாரம் மேம்படும் என்று நபார்டு வங்கியின் முதன்மைப் பொதுமேலாளர் கூறியுள்ளார்.

(Voice Byte - Anand - 48 Sec)

இம்மாவட்டத்தில் அருநூத்துமலை உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் சிறுதானியங்கள் சேலம் நகர மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக விவசாயி திருமதி ஜோதி தெரிவிக்கிறார்.

(Voice Byte - Jothi - 16 Sec)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

நேபாள நாடாளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகர் திரு.கிருஷ்பகதூர் மஹரா, தங்கக் கடத்தல் குற்றச்சாட்டின்பேரில், அந்நாட்டு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

--------------

மணிப்பூரில், பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட சோதனையில், KCP அமைப்பைச் சேர்ந்த நான்கு தீவிரவாதிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

--------------

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் வடகிழக்கு எல்லைப்புற ரயில்வேயின் சரக்குப் போக்குவரத்து சுமார் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது.

--------------

சத்தீஸ்கட் மாநிலத்தின் பீஜப்பூர் மாவட்டத்தில், பாதுகாப்புப் படையினர் கூட்டாக மேற்கொண்ட சோதனையில், 8 நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டனர்.

--------------

கரூர் ஜவஹர் பஜார் பகுதியில், தீபாவளியை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ஜோஷ் தங்கையா ஆய்வு செய்தார்.

--------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகேயுள்ள கெலவரப்பள்ளி அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் ரசாயன நுரை கலந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

--------------

சேலம் அம்மாபேட்டை பகுதியில் வீட்டுவசதி வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பின் ஒருபகுதி இடிந்து விழுந்ததில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

--------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

வில்வித்தை ப்ரீமியர் லீக் போட்டியில் ராஜ்புத்தானா ராயல்ஸ் அணி கோப்பையை வென்றது.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த அணி, 5-4 என்ற புள்ளிக் கணக்கில் ப்ருத்திவிராஜ் யோதாஸ் அணியை வென்றது.

---------------

உலகக் கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வென்றது.

விசாகப்பட்டினத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் பந்துவீச தீர்மானித்ததையடுத்து, பேட் செய்த இந்தியா 48 புள்ளி 5 ஓவரில் 330 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

331 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா 49 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 331 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

<<<<The End>>>>